**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேவகோட்டை.**

**முன்னிலை:- செல்வி. D. பூர்ணிமா, B.A.B.L.(Hons.),LL.M.,**
**நீதித்துறை நடுவர், தேவகோட்டை.**

**2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 06-ம் நாள் திங்கள்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057 விசுவாவசு வருடம் ஆனி திங்கள் 22-ம் நாள்**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 158/2024**
(குற்ற எண்.01/2022, வேலாயுதப்பட்டிணம் காவல் நிலையம்)

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
வேலாயுதப்பட்டிணம் காவல்நிலையம்,
குற்ற எண்.01/2022.

....குற்றமுறையிடுபவர்

/எதிராக/

1.தினேஷ்குமார் (31/2022)
த/பெ. பூமிநாதன்

.....எதிரி

குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 விதி 106(4)ன் படி வழக்கின் சுருக்கம்

| வ.எண் | விளக்கம் | விபரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர்,<br>வேலாயுதப்பட்டிணம் காவல்நிலையம்,<br>குற்ற எண்.01/2022. |
| 2. | எதிரி | 1.தினேஷ்குமார் (31/2022)<br>த/பெ. பூமிநாதன் |

<table>
<tr><td></td><td></td><td colspan="3"><u>முகவரி:</u><br>கதவு எண். 1145, தென்னீர்வயல், தேவகோட்டை தாலுகா, சிவகங்கை மாவட்டம்.</td></tr>
<tr><td>3.</td><td>குற்றச்சாட்டுகள்</td><td colspan="3">எதிரி மீது இதச பிரிவுகள் 457, 380, 427-ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>4.</td><td>சம்பவம் நடந்த நாள்</td><td colspan="3">12/01/2022</td></tr>
<tr><td>5.</td><td>முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">13/01/2022</td></tr>
<tr><td rowspan="2">6.</td><td>எதிரி கைது செய்யப்பட்ட நாள்</td><td colspan="2">26/03/2024</td><td rowspan="2">முன்பிணை பெற்ற நாள்: இல்லை</td></tr>
<tr><td>பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள்</td><td colspan="2">Crlmp 224/2025 ல் பிறப்பிக்கப்பட்ட 21/01/2025 தேதியிட்ட உத்தரவின் படி பிணை வழங்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>7.</td><td>குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">04/11/2024</td></tr>
<tr><td>8.</td><td>கு.வி.மு.ச பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள்</td><td colspan="3">25/06/2025</td></tr>
<tr><td>9.</td><td>கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="3">-----</td></tr>
<tr><td>10.</td><td>வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | விசாரணை செய்யப்பட்ட நாள் | அ.சா.1 | 15/07/2025 | 15/07/2025 |
| | | அ.சா.2 | 15/07/2025 | 15/07/2025 |
| | | அ.சா.3 | 02/08/2025 | 02/08/2025 |
| | | அ.சா.4 | 10/11/2025 | - |
| | | அ.சா.5 | 20/05/2026 | 20/05/2026 |
| | | அ.சா.6 | 25/05/2026 | 25/05/2026 |
| | | அ.சா.7 | 09/06/2026 | 09/06/2026 |
| | | அ.சா.8 | 29/06/2026 | 29/06/2026 |
| 11. | எதிரியிடம் குற்றம் குறித்து பி.என்.எஸ்.எஸ் பிரிவு 351(1)(b)ன் கீழ் வினவிய நாள் | 12/06/2026, 02/07/2026 | | |
| 12. | எதிரிகளின் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | பிடியாணை வழங்கப்பட்ட நாள் | பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள் | |
| | | ------ | ----- | |
| 13. | வழக்கு விசாரணை தொடங்கிய நாள் | 25/06/2025 | | |
| 14. | வழக்கு விசாரணை முடிந்த நாள் | 02/07/2026 | | |
| 15. | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 06/07/2026 | | |
| 16. | தீர்வு | **முடிவாக, எதிரி இதச பிரிவுகள் 457, 380, 427-ன் குற்றவாளி அல்ல என்று** | | |

| | | |
|---|---|---|
| | | **தீர்மானித்து எதிரியை மேற்படி குற்றச்சாட்டுக்களைப் பொறுத்து பி.என்.எஸ்.எஸ் பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.** |

இந்த வழக்கானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.கௌசல்யா, அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

**1. குற்றமுறையீட்டின் சுருக்கம்:-**

இவ்வழக்கின் வாதியான தனலெட்சுமி என்பவர் நாச்சாங்குளத்தில் உள்ள தனது வீட்டை பூட்டிவிட்டு தேவகோட்டை ராம் நகரில் வசித்து வந்தவர் கடந்த 13.01.2022 ஆம் தேதி காலை 09.20 மணியளவில் தனது வீட்டை வந்து பார்த்த போது எதிரி 12.01.2022 ஆம் தேதி இரவு வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே சென்று வீட்டில் இருந்த பணம் ரூபாய் 5,000/- த்தை திருடியும் வேறு பொருள்கள் ஏதும் இல்லாததால் வீட்டில் இருந்த துணிகளை தீயை வைத்து எரித்து சேதபடுத்திய

குற்றத்திற்காக எதிரி மீது இதச பிரிவு 457, 380, 427-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பி.என்.எஸ்.எஸ் பிரிவு 230 இன் படி எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரி மீது இதச பிரிவுகள் 457, 380, 427-ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி வினவிய போது எதிரி குற்றங்களை மறுத்துரைத்தார். எனவே அரசு தரப்பு சாட்சியங்களின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ 1 முதல் அ.சா.ஆ 6 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

(5.1) அ.சா.1 தனலெட்சுமி தனது சாட்சியத்தில் தான் தேவகோட்டையில் குடியிருந்து வருகிறேன் என்றும் தனக்கு சொந்த ஊர் நாச்சாங்குளம் கடந்த 13.01.2022-ம் தேதி காலை 09.00 மணியளவில் தான் நாச்சாங்குளத்தில் உள்ள தன் வீட்டை பார்த்தபோது

கதவுகள் இரண்டும் உடைக்கப்பட்டு இருந்தது என்றும் பக்கத்தில் இருந்த சாட்சி இளஞ்செழியனிடம் சொல்லி அவரையும் அழைத்துக் கொண்டு உள்ளே சென்று பார்த்தேன் என்றும் பெட்ரூமில் போய் பார்த்த போது அங்கிருந்த வீட்டுப்பட்டா, நிலப்பட்டாக்கள், தங்கள் வீட்டின் உள்ள நால்வரின் ஆதார் கார்டு, ரேசன் கார்டு, துணிமணிகள் ஆகியவை எரிந்து கொண்டு இருந்தது என்றும் சாமி ரூமில் செலவுக்கு வைத்திருந்த ரொக்கப்பணம் ரூ.5000/-காணாமல் போய் இருந்தது என்றும்  இது சம்பந்தமாக வேலாயுதப்பட்டிணம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும் தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் தான் கொடுத்தது தான் என்றும் அதில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும் (புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.2) அ.சா.2 இளஞ்செழியன் தனது சாட்சியத்தில் தான் நாச்சாங்குளத்தில் குடியிருந்து விவசாய வேலை பார்த்து வருகிறேன் என்றும் அ.சா.1 யை தெரியும். அ.சா.1 தனது பக்கத்து வீட்டுக்காரரர் என்றும் கடந்த 13.01.2022-ம் தேதி காலை 09.30 மணிக்கு அ.சா.1 அவருடைய வீட்டை பார்த்துவிட்டு தன்னை கூப்பிட்டார் என்றும் தான் போய் பார்த்த போது ஒரே புகை மண்டலமாக இருந்தது என்றும் தாங்கள் தண்ணீர் ஊற்றி அணைத்தோம் என்றும் தீயில் மெத்தை, ஆதார் கார்டு, சான்றிதழ்கள், ரேசன் கார்டு, இடத்து பத்திரங்கள் ஆகியவை எரிந்திருந்தது என்றும்

பிறகு காவல் துறையில் அ.சா.1 புகார் கொடுத்தார் என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.3) அ.சா.3 காளைலிங்கம் தனது சாட்சியத்தில் தான் தற்போது நாச்சாங்குளத்தில் குடியிருந்து பெட்டிக் கடை வைத்திருக்கிறேன் என்றும் கடந்த 2022-ம் ஆண்டு பொங்கலுக்கு முதல் நாள் தனசேகரன் மற்றும் தனலெட்சுமி வீட்டில் தீப்பிடித்தது சம்பவம் தொடர்பாக வேலாயுதப்பட்டிணம் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து அவர் தயார் செய்த பார்வை மகஜரில் 1 வதாக கையெழுத்திட்டேன் என்றும் (பார்வை மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.4) அ.சா.4 செந்தில்குமார் தனது சாட்சியத்தில் தான் தற்போது சிந்தாமணியில் குடியிருந்து வருகிறேன் என்றும் அ.சா.1யை தெரியும். கடந்த 13.01.2022-ம் தேதி காலை 07.30-08.00 மணியளவில் நாச்சாங்குளம் சென்று அ.சா.2 னின் வீட்டில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தேன் என்றும் அப்போது அ.சா.1 வந்து என் வீடு உடைந்துகிடக்கிறது வந்து பாருங்கள் என்று கூப்பிட்டார் என்றும் போய் பார்த்த போது கிரில்கேட் பூட்டு உடைந்திருந்தது என்றும் போலீஸ் வருவதற்காக காத்திருந்த போது உள்ளே இருந்து புகையாக வந்தது என்றும் உள்ளே இருந்த மரக்கதவும் திறந்தநிலையில் சாத்தப்பட்டிருந்தது என்றும் அதை தள்ளி உள்ளே போன போது

சொத்துபத்திரம், வாக்காளர் அடையாள அட்டை, ஆதார், கல்விச் சான்றிதழ்கள் ஆகியவை எரிந்து புகையாக புகைந்து கொண்டிருந்தது என்றும் பிறகு அதை தண்ணீர் ஊற்றி அணைத்து விட்டு மின்சார இணைப்பை துண்டித்தோம் என்றும் அ.சா.1 சாமி படத்திற்கு அருகே ரூ.5000/-பணம் வைத்திருந்ததாகவும் அதை காணவில்லை என்றும் சொன்னார் என்றும் பிறகு போலீசார் வந்துவிட்டார்கள் என்றும் தாங்கள் காவல் நிலையம் சென்று மனு கொடுத்துவிட்டு வந்தோம் என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.5) அ.சா.5 A.மாணிக்கம் தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்து சாட்சியம் அளித்து முதல் தகவல் அறிக்கையை அ.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

(5.6) அ.சா.6 மாணிக்கம் தனது சாட்சியத்தில் இவ்வழக்கில் புலன்விசாரணை அதிகாரியாக புலன்விசாரணை மேற்கொண்டு குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்தும், எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியது குறித்தும் எதிரியை கைது செய்தது குறித்தும், சட்டப்பிரிவை மாற்றம் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.7) அ.சா.8 செபஸ்தி தனது சாட்சியத்தில் தான் தற்போது வேலாயுதப்பட்டிணம் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றம்

தனக்கு முன்பாக பணியாற்றிய சார்பு ஆய்வாளர் திரு. A.மாணிக்கம் அவர்களையும் அவர் கையெழுத்துக்களையும் நன்கு தெரியும் என்றும் அதன் அடிப்படையில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் கடந்த 13/01/2022ம் தேதி 16.00 மணிக்கு நாச்சாங்குளம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார் என்றும் மேற்படி மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் முறையே அ.சா.ஆ.5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்தும், ஆவணங்களிலிருந்தும் எதிரிக்கு பாதகமாகத் தோன்றும் அம்சங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து பி.என்.எஸ்.எஸ் பிரிவு 351(1)(b) இன் கீழ் வினவ எதிரி சாட்சியங்களை பொய் என மறுத்துரைத்தார். மேலும் எதிரி தமது தரப்பில் சாட்சியங்கள் இல்லை என்று தெரிவித்ததன் அடிப்படையில் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுகளை தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்?

**8. தீர்வு**

(8.1) இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 ன் சாட்சியத்தை முழுமையாக கருத்தில் கொள்கையில் அ.சா.1 சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பது

தெளிவாகிறது. கடந்த 13/01/2022-ம் தேதி காலை 9.00 மணி அளவில் அ.சா.1 நாச்சாங்குளத்தில் உள்ள அவருடைய வீட்டை பார்த்தபோது கதவுகள் இரண்டும் ஏற்கனவே உடைக்கப்பட்டிருந்ததும் வீட்டு பட்டா, நில பட்டா, ஆதார் கார்டு, ரேஷன் கார்டு, துணிமணிகள் போன்றவை எரிந்து கொண்டிருந்ததும் பணம் ரூ.5000/- காணாமல் போயிருந்ததும் அ.சா.1 ன் முதல் விசாரணை சாட்சியத்தில் இருந்து தெரிய வருகிறது. எனவே அ.சா.1 சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பதும் சம்பவத்தில் யார் ஈடுபட்டார் என்பது அ.சா.1 க்கு தெரியாது என்பதும் தெளிவாகிறது.

(8.2) கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 ன் சாட்சியத்தையும் முழுமையாக கருத்தில் கொள்கையில் அ.சா.2 க்கும் சம்பவம் நேரடியாக தெரியாது என்பதும் சம்பவம் நடைபெற்று வீடு உடைக்கப்பட்ட பின்னரே அ.சா.2 சென்று பார்த்துள்ளார் என்பதும் அவருடைய சாட்சியத்தில் இருந்து தெளிவாகிறது. மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.4 ன் சாட்சியத்தை முழுமையாக கருத்தில் கொள்கையில் அ.சா.4 ன் சாட்சியத்தில் இருந்தும் சம்பவம் அ.சா.4 க்கு நேரடியாக தெரியாது என்பதும் அவர் சம்பவத்தை பார்க்கவில்லை என்பதும் வீடு உடைக்கப்பட்ட பின்பே சென்று பார்த்துள்ளார் என்பதும் தெளிவாகிறது. ஆக அ.சா.1, 2, 4 ஆகியோரின் சாட்சியத்தில் சம்பவத்தில் யார் ஈடுபட்டார் என்பது குறித்து எந்த சாட்சியமும் இல்லை.

(8.3) அவ்வாறு இருக்கையில் விசாரணை அதிகாரியான அ.சா.6 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் இந்த வழக்கு சம்பவம் குறித்து எதிரி காளையார் கோவில்

காவல் நிலையத்தில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சம்பிரதாய கைது செய்யப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எந்த ஒரு பொருளோ அல்லது பொருண்மையோ புதிதாக கண்டுபிடிக்கப்பட்டதாகவோ கைப்பற்றப்பட்டதாகவோ அரசு தரப்பு வழக்கு அல்ல. எனவே அ.சா.6 குறிப்பிடும் ஒப்புதல் வாக்குமூலம் இவ்வழக்கில் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. எனவே எதிரி தான் சம்பவத்தில் ஈடுபட்டார் என்பதை நிரூபிக்கும் விதமாக அரசு தரப்பில் எந்த சாட்சியங்களும் அமையவில்லை. எனவே மேற்கண்ட விவாதங்களையும் காரணங்களையும் சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் கருத்தில் கொள்கையில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது . எனவே எதிரி சந்தேகத்தின் பலனைப் பெற தகுதியுடையவர் ஆகிறார்.

**9) முடிவாக, எதிரி இதச பிரிவுகள் 457, 380, 427-ன் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து எதிரியை மேற்படி குற்றச்சாட்டுக்களைப் பொறுத்து பி.என்.எஸ்.எஸ் பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஜுலை திங்கள் 06-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

POORNIMA
Digitally signed by POORNIMA
Date: 2026.07.06 18:06:11 +0530

**நீதித்துறை நடுவர்**

**தேவகோட்டை.**

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| S.No | Witness of the Prosecution | How examined | Description of the Witness |
|---|---|---|---|
| 1. | தனலெட்சுமி | அ.சா.1 | புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்ட சாட்சி |
| 2. | இளஞ்செழியன் | அ.சா.2 | கண்ணுற்ற சாட்சி |
| 3. | காளைலிங்கம் | அ.சா.3 | பார்வை மகஜர் சாட்சி |
| 4. | செந்தில்குமார் | அ.சா.4 | கண்ணுற்ற சாட்சி. |
| 5. | A.மாணிக்கம் | அ.சா.5 | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அதிகாரி |
| 6. | மாணிக்கம் | அ.சா.6 | விசாரணை அதிகாரி |
| 7. | மயில் லிங்கம் | அ.சா.7 | பார்வை மகஜர் சாட்சி |
| 8. | செபஸ்தி | அ.சா.8 | தற்போதைய விசாரணை அதிகாரி |

## Judicial Form No. 68

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| S.No | Description of the exhibit | Date when the exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | புகார் மனு | 15/07/2025 | அ.சா.ஆ.1 | அரசு தரப்பு | அசல் |
| 2. | பார்வை மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து | 02/08/2025 | அ.சா.ஆ.2 | அரசு தரப்பு | அசல் |
| 3. | முதல் தகவல் அறிக்கை | 20/05/2026 | அ.சா.ஆ.3 | அரசு தரப்பு | அசல் |
| 4. | பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து | 09/06/2026 | அ.சா.ஆ.4 | அரசு தரப்பு | அசல் |
| 5. | மாதிரி வரைபடம் | 29/06/2026 | அ.சா.ஆ.5 | அரசு தரப்பு | அசல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | பார்வை மகஜர் | 29/06/2026 | அ.சா.ஆ.6 | அரசு தரப்பு | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள்: இல்லை**

**எதிரி தரப்பு சாட்சி,சான்றாவணம், சான்றுப் பொருள் - இல்லை**

POORNIMA Digitally signed by POORNIMA Date: 2026.07.06 18:06:21 +0530

**நீதித்துறை நடுவர்**

**தேவகோட்டை.**

**<u>பின்குறிப்பு:-</u>**

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.

2. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

3.விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.